[1982 மார்ச் 15]

வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு.

*வினா எண். 500—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளைப்பூண்டு அழுகும் பொருளாக அறிவிக்கப்பட்டு வரிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இக்கோரிக்கை ஏற்பதற்கு இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு இல்லை என்று சொன்னார்கள். அது அழுகும் பொருளாக அறிவிக்கப்பட்டு வரி விலக்கு அளிக்கப்படுமா என்கிற கோரிக்கை. எனவே வெள்ளைப் பூண்டு என்பது அழுகும் பொருளாக இருக்கின்ற காரணத்தினால் ரொம்ப நாள் அதை வைத்து வாணிகம் செய்ய முடியாத காரணத்தினால் அது விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைந்து இருக்கின்ற காரணத்தாலும், மீண்டும் கருணையோடு பரிசீலனை செய்து அழுகும் பொருளாக இருக்கின்ற நிலையில் அதற்கு வரி விலக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பச்சைக் காய்கறிகள், பழங்கள், வெற்றிலை, வாழை இலை, பூ, முட்டை, மாமிசம், மீன் ஆகியவைகளை அழுகும் பொருள்களாக இன்றைக்கு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. வெள்ளைப் பூண்டை அழுகும் பொருளாக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் இப்படி பல இடங்களில் இருந்து இப்படி கோரிக்கைகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்யும்படி நான் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதில் வரி விலக்குக் கொடுத்தால் அரசுக்கு 8 லட்சம் ரூபாய் வரி இழப்பு ஏற்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழுகும் பொருள் பட்டியலில் அது சேரவில்லை என்று சொன்னார்கள். அது வாயுத் தொல்லையையும், இருதய நோயையும் போக்க சிறந்த மருந்துப் பொருளாக இருக்கின்ற வகையிலாவது அதனை கணக்கில் எடுத்துக் கொண்டு அரசு பரிசீலனை செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மருந்துப் பொருளாக இருப்பதால் அதை இரண்டு விதங்களில் நோக்க வேண்டி இருக்கிறது, மருந்துப் பொருள

[1982 மார்ச் 15

எல்லோரும் வாங்குகின்ற வகையில் குறைக்கப்படுவது ஒன்று. மருந்துப் பொருள்களுக்கு அதிக டிமாண்டு இருப்பதால், எதில் இதை சேர்ப்பது என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வெங்காயத்தைப் போல வெள்ளைப் பூண்டும் அழுகும் பொருள் வகையைச் சேர்ந்ததுதான் என்பது அனைவருக்கும் தெரியும். வெங்காயத்தையாவது 6 மாதத்திற்கு பாதுகாக்கலாம். ஆனால் வெள்ளைப் பூண்டை 3 மாதங்களுக்கு மேல் பாதுகாக்க முடியாது ; அழுகி விடும். மேலும் கொடைக்கானல் பகுதியில் இந்த வெள்ளைப் பூண்டை சிறு விவசாயிகள், 60 சென்ட், 70 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் தான் விவசாயம் செய்கிறார்கள். எனவே இதை மறுபரிசீலனை செய்து வரி விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இது பற்றி விளக்கமாகக் கடிதம் மூலமும் நேரடியாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் தெரிவித்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இப்போது கொடைக்கானலில் இப்படிப்பட்ட கஷ்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்த வெள்ளைப் பூண்டுக்கு சில வட மாநிலங்களில் வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது 7 இலட்சம் ரூபாய் இழப்பு வரும் என்று சொன்னார்கள். கோடிக் கணக்கில் விவசாயிகளுக்கு சலுகைகள் அளிப்பதாகச் சொல்லும் இந்த அரசு இந்த வெள்ளைப் பூண்டு பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நன்மை பயக்கும் என்பதால் வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு செய்தால் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும். ஆகையால் வட மாநிலங்களைப் போல இங்கேயும் வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வட மாநிலங்களிலே இதற்கு வரி விலக்கு இருக்கிறதா இல்லையா என்ற கணக்கு என்னிடம் இல்லை. அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்றால் அது பற்றி அரசு யோசிக்க வேண்டியதுதான். அதே நேரத்தில் வரி போடுவதால் நல்ல பெயர் வருமா, வரி போடாததால் நல்ல பெயர் வருமா என்பது முக்கியமல்ல. இது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.